# துணை விதிகள்

**புத்தளம் நகர சபை**

*நகர சபைகள் கட்டளைச் சட்டம்*

(255 ம் அத்தியாயமான்) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் புத்தளம் நகர சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 5.2.1975.

**துணை விதிகள்**

1. புத்தளம் நகர சபை எல்லைகளினுள்,

(அ) அத்தகைய இடம் அந்த நோக்கத்திற்குத் தகுதியானதென அப்போது பதவியிலிருக்கும் சபையினால் தீர்மானமூலம் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன்,

(ஆ) இதன் கண்ணுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களின்படி கணக்கிடப்பட்டுள்ள கட்டணமொன்றைச் செலுத்திய தன் பேரில் தலைவரிடமிருந்து அல்லது தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரொருவரிடமிருந்து அதன்பொருட்டு அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றிருந்தாலன்றி,

அந்த எல்லைக்குள் அமைந்துள்ள பொது வழி எதிலிருந்தும் பார்க்கக் கூடியவண்ணம் விளம்பரமெதனையும் எவரும் பார்வைக்கு வைத்தல் அல்லது காட்சிக்கு வைத்தலாகாது.

ஆயினும், இத்துணைவிதியின் முற்போந்த ஏற்பாடுகள், பின்வரும் விளம்பரங்கள் எவற்றையும் பார்வைக்கு வைத்தல் அல்லது காட்சிக்கு வைத்தல் ஆகியவற்றிற்கும் பொருந்தா.

(அ) வியாபார இடமெதிலும் அவ்வியாபார நோக்கங்களுக்காக அல்லது,

(ஆ) மனைத்தலம் எதிலும், அத்தகைய மனைத்தலங்கள் அல்லது அத்தகைய மனைத்தலங்களில் அமைந்துள்ள பொருளேனும் வாடகைக்கு அல்லது விற்பனைக்கு எனும் விடயத்தை விளம்பரப் படுத்தும் நோக்கத்திற்காக.

2. 1 ம் துணைவிதி மீறப்படும் ஒவ்வொரு தடவையிலும் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத அபராதம் ஒன்றும் தொடர்ந்தும் மீறி நடப்பாராயின் குற்றவாளியாகக் காணப்பட்ட அல்லது அம்மீறிய செயலைக் கவனத்துக்கு எடுக்குமாறு தலைவர் எழுத்து மூலம் அறிவித்த பின்னர் தொடர்ந்தும் அம்மீறிய செயலைச் செய்யும் ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாவுக்கு மேற்படாத மேலதிக அபராதம் ஒன்றும் விதிக்கப் படப் பாத்திரராவார்.

3. இத் துணைவிதிகளில்—

"தலைவர்" எனில் சபையின் தலைவர் எனப் பொருள்படும்.

"சபை" எனில் புத்தளம் நகர சபை எனப் பொருள்படும்.

"கட்டளைச்சட்டம்" எனில் 1939 ம் ஆண்டின் 61 ம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்.

"பொதுவழி" என்பது 1939 ம் ஆண்டின் 61 ம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்திலுள்ள அதே கருத்துடையதாகும்.—

**அட்டவணை**

| | அனுமதிப்பத்திரக் கட்டணம் | மாத மொன்றுக்கு ரூ. ச. | வருட மொன்றுக்கு ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | சுவர் அல்லது விளம்பரப் பலகையொன்றில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள விளம்பரம் இயக்கப்படக் களியாட்டம் சம்பந்தமான விளம்பரமொன்று நீங்கலாக (சதுர அடி ஒவ்வொன்றிற்கும்) .. | 1 0 | 10 0 |
| 2. | எந்த நபராலும் கொண்டு செல்லப்படும் அல்லது நகர்ந்து கொண்டிருக்கும் வாகனம் ஒன்றிற் பொருத்தப்பெற்று பலகை அல்லது ஆதாரமொன்றில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள விளம்பரமொன்று (இயக்கப்படக் களியாட்டம் சம்பந்தமான விளம்பரமொன்று நீங்கலாக)— | | |
| | (அ) விளம்பரம் ஆறு சதுர அடிகளுக்கு மேற்படாதிருக்குமிடத்து ஒவ்வொரு சதுர அடிக்கும் .. | 1 0 | 10 0 |
| | (ஆ) விளம்பரம் ஆறு சதுர அடிக்கு மேற்பட்டிருக்குமிடத்து ஒவ்வொரு சதுர அடிக்கும் .. | 1 50 | 10 0 |
| 3. | இயக்கப்படக் களியாட்டம் சம்பந்தமான விளம்பரம் சதுர அடி ஒவ்வொன்றிற்கும் .. | 0 25 | 2 50 |

2–484—21.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 152

---

# நானாவித அறிவித்தல்கள்

**கரவாகு தெற்குக் கிராமசபை**

*இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்*

இறைச்சிக்காரர் பற்றிய 1946 ம் ஆண்டின் 44 ம் இலக்க திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காணும் அட்டவணையில் காணபோரிடமிருந்து 1975 ம் ஆண்டுக்கு ஆடு/மாடடித்து இறைச்சி விற்பதற்கான உத்தரவுப்பத்திரம் தருமாறு விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

இக்கிராமசபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் மேற்குறிப்பிட்ட உத்தரவுப் பத்திரம் கொடுப்பதை மறுக்கவிரும்பின் மறுப்புக்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு (7) நாட்களுக்குள் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் கேட்கப்படுகின்றனர்.

**அட்டவணை**

| | விண்ணப்பகாரர் பெயர் | விலாசம் | தொழில் செய்யுமிடம் |
|---|---|---|---|
| 1. | உதுமாங்கண்டு இனியதம்பி | சாய்ந்தமருது 2 ம் குறிச்சி | சாய்ந்தமருது மார்க்கட் |
| 2. | மீராசாய்பு ஆதம்பாவா | சாய்ந்தமருது 1 ம் குறிச்சி | சாய்ந்தமருது மார்க்கட் |
| 3. | ஆதம்பாவா மீராமுகைதீன் | சாய்ந்தமருது தமிழ்க்குறிச்சி | சாய்ந்தமருது மார்க்கட் |
| 4. | அகமது லெப்பை காசின்பாவா | சாய்ந்தமருது 1 ம் குறிச்சி | சாய்ந்தமருது மார்க்கட் |
| 5. | ஆதம்பாவா முகம்மதிஸ்மாயில் | கல்முனைக்குடி 4 ம் குறிச்சி | சாய்ந்தமருது மெயின்வீதி |
| 6. | ஆதம்பாவா இஸ்மா லெப்பை | சாய்ந்தமருது தமிழ்க்குறிச்சி | சாய்ந்தமருது மார்க்கட் |
| 7. | ஆதம்பாவா அபூபக்கர் | சாய்ந்தமருது 5 ம் குறிச்சி | மெயின் வீதி, சா. ம. |
| 8. | அகமது லெப்பை, ஆதம்பாவா | சாய்ந்தமருது 4 ம் குறிச்சி | சாய்ந்தமருது மார்க்கட் |
| 9. | அகமதுலெப்பை அபூபக்கர் | சாய்ந்தமருது 1 ம் குறிச்சி | சாய்ந்தமருது மார்க்கட் |
| 10. | அகமது லெப்பை அப்துல் மஜீட் | சாய்ந்தமருது 4 ம் குறிச்சி | சாய்ந்தமருது 3 ம் குறிச்சி |
| 11. | அகமதுலெப்பை, முகம்மது | சாய்ந்தமருது 6 ம் குறிச்சி | சாய்ந்தமருது 6 மார்க்கட் |

ஏ. எல். எம். யூசுப்,
கி. ச. தலைவர்,
கரவாகு தெற்கு.

கிராமசபை அலுவலகம்,
கரவாகு தெற்கு,
சாய்ந்தமருது, கல்முனை,
4.2.1975.

2–490—21.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 152

முல்லைத்தீவுப் பட்டண சபை

பட்டண சபைகள் கட்டளைச் சட்டம்

**1975 ம் ஆண்டுக்கான விசேட மல கூட வரி**

(256 ம் அத்தியாயமான) பட்டண சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினாற் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடன் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக முல்லைத்தீவுப் பட்டணத்தினுள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு நான்கு வீதமாகவும் முறையே மார்ச் 31, யூன் 30, செப்தெம்பர் 30, திசம்பர் 31 ஆகிய தினங்களில் நான்கு தவணைகளில் சம தொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட மலகூட வரியை 1975 ம் ஆண்டு முல்லைத்தீவுப் பட்டண சபை விதித்துள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஈ. வீ. எஸ். த அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1975 ம் ஆண்டு பெப்ரவரி மீ 6 ந் உ.

2–560—21.02.75 ம் திகதிய வர்த்தமானி இல! 152

வவுனியா நகரம்

உன்மத்தரோக அபாயம்

உன்மத்தரோகக் கட்டளைச்சட்டம் பிரிவு 11 ன் பிரகாரம் (இலங்கை விதி வகிக்கும் சட்டநிருபணம் அத்தியாயம் 476) வவுனியா நகர பரிபாலனத்திற்குட்பட்ட எல்லைக்குள் உன்மத்தரோக அபாயம் இருக்கிறதென்பதை இத்தால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

எந்த ஒரு ஆண்/பெண் நாயோ வவுனியா நகர எல்லைக்குள் தனிப்பட்டோரது சொந்த வளவிலோ, தோட்டத்திலோ, கட்டிடத்திலோ, வீதியிலோ, பொது இடத்திலோ கட்டப்படாததும், கூட்டிச்செல்லப்படாததுமாகக் காணப்பட்டால் என்னால் எழுத்து மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒருவரால் உடனடியாகக் கொல்லப்படத்தக்கதாகும்.

இவ்வறிவித்தல் இதில் குறிப்பிட்டிருக்கும் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

ராசலிங்கம் தியாகலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வவுனியா நகரம்

விசேட ஆணையாளர் அலுவலகம்,
வவுனியா,
1975 ம் ஆண்டு பெப்ரவரி மீ 6 ந் உ.

2–533—21.02.75 ம் திகதிய வர்த்தமானி இல. 152

